RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222811

# குறுந்தொகையில் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகள்

ஆ. ராஜேஸ்வரன் [அ, *], அ. செந்தில்நாராயணன் [அ]

[அ] தமிழ்த்துறை, தியாகராாசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா.

# Social Development Thoughts in Kurunthogai

A. Rajeshwaran [a, *], A. Senthilnarayanan [a]

[a] Departent of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: pavithraa0501@gmail.com

Received: 26-09-2022
Revised: 29-10-2022
Accepted: 11-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Literature and society are inseparable. A work originates from society. Songs of Kurunthogai captures the image of Sangam society. Individual, family, environment and society are the four basic factors for social development. It is their civilizational development that builds a civilized society. Economic wealth, knowledge, philanthropy and social duties of sangam era are revealed in this song. Virtue, materiality and pleasure were the principles of life of the Sangam people. The inner strength of the husband and wife speaks of the mental strength of the people of the Sangam era. The internal songs featured in Kurunthogai are sung by various poets. The ecology of the Sangam period, the stages of social development of that time, and its development status, which appeared in the thinking of many poets, are known. People of the Sangam era do not live for themselves and is known as a virtuous person who lives for others. People of the Sangam period were worshipers of God. This article explains the social development thoughts in Kurunthogai.

**Keywords:** Kurunthogai, Sangam people, Virtue, Development,

## முன்னுரை

இலக்கியமும் சமுதாயமும் பிரிக்க முடியாததாகும். ஒரு படைப்பானது சமூகத்தின் வழிநின்றே தோற்றம் பெறுகின்றது. குறுந்தொகைப் பாடல்கள் சங்ககாலச் சமூகத்தை படம் பிடித்து தருகின்றன. தனிமனிதன், குடும்பம், சுற்றம், சமூகம் என்னும் நான்கும் சமூக மேம்பாட்டிற்கு அடிப்படை காரணிகளாகும். இவற்றின் நாகரீக வளர்ச்சியே பண்பாடுடைய சமூகத்தைக் கட்டமைக்கின்றது. சங்க கால பொருளாதார வளம், அறிவாற்றல், சான்றோர் சொல்வளம் முதலான அற வழியிலான சமூகக் கடமைகள் அறியப்படுகின்றன. அறம், பொருள், இன்பம் என்பவை சங்க கால மக்களின் வாழ்வியல் கொள்கையாக அமைந்தது. தலைவன், தலைவியரின் உள்ளத் திண்மை சங்க கால மக்களுக்கான மன வலிமையைக் கூறுகின்றது. குறுந்தொகையில் இடம்பெறும் அகப் பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டதாகும். பல புலவர்களின் சிந்தனையில் தோன்றிய சங்ககாலச் சூழலியலையும், அக்காலச் சமூக மேம்பாட்டிற்கான படிநிலைகளையும், அதன் வளர்ச்சி நிலையினையும் அறியப்படுகின்றது. சங்ககால மக்கள் தனக்கென வாழாது, பிறருக்கென வாழும் அறப்பண்புடையவர் என்பதனை அறியப்படுகின்றது. சங்ககால மக்கள் இறை வழிபாடு உடையவராய் திகழ்ந்தனர்.

## வாழ்வியல் அறம்

வாழ்வதற்கு அறம், பொருள், இன்பம் அடிப்படை என்பதனை,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"

இந்நூற்பாவில் அறியப்படுகின்றது (Ilampuranar, 2019). குறுந்தொகையில் ஆடவன் தன் உழைப்பில் வாழ வேண்டும் என்னும் அறத்தை வலியுறுத்துகின்றது.

## வேளாண் தொழில் வளம்

சங்க காலம் வேளாண் வளமுடயதாய், திகழ்ந்ததனை,

"பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்

கொழுங்கொடி அவரை பூக்கும்"

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Somasundaranar, 2007). வேளாண்மைத் தொழில் சங்ககாலம் தொடங்கி சமகாலச் சூழலிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான காரணியாக திகழ்கின்றது.

## குடும்ப சொத்து

ஒருவன் தன் மூதாதையர்களின் சொத்துக்களை காப்பது அவன் கடமையாகும். அவன் அவற்றை எளிதாக விற்றுவிடக் கூடாது. முன்னோர்களது பொருளை தனக்காகப் பயன்படுத்துபவன் இறந்தவனாவான் என்பதனை,

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச்

சொல்லிய வன்மை தெளியக் காட்டி"

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Somasundaranar, 2007). இதன்வழி, முன்னோர்களின் பொருளைச் சேமித்து வைத்தல் அவனது வாழ்விற்கு வளம் சேர்க்கும் என்பது அறியப்படுகின்றது.

## ஈகை

வறியவர்களுக்கு உதவாமல் வாழும் வாழ்வானது வாழ்வன்று. வறியவர்களுக்கு உதவி செய்யாமல் வாழும் இழிநிலையினை,

"மெல்லியல் அரிவை நின் நல்லகம் புலம்ப

நிற்றுறந்து அமைகுவென் ஆயின் - எற்றுறந்து

இரவலர் வாரா வைகல்

பலவா குக-யான் செலவுறு தகவே!"

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Somasundaranar, 2007). மனிதன் வாழும் காலத்திலே பிறருக்கு உதவி செய்து, சமூக மேம்பாட்டிற்குரியவனாகத் திகழ வேண்டும். ஈகையின் சிறப்பினை,

"உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே

பிறவு மெல்லா மோரொக் கும்மே

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பே மெனினே தப்புந பலவே"

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Duraiswamipillai, 2017). பொருளில்லாதவர்க்கு ஒரு பொருளே கொடுப்பதே ஈகை என ஈகை குறித்து வள்ளுவர்,

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்

குறியெதிர்ப்பை நீர துடைத்து"

கூறுகின்றார் (Devaneyap Pavanar, 2007).

## அறத்தொடு நிற்றல்

தலைவன், தலைவரின் களவொழுக்கத்தைக் அறத்தொடு எடுத்துரைத்தல், அறத்தொடு நிற்றலாகும். இது சங்ககாலக் காதலை நயமுற எடுத்துரைக்கும் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகும். அறத்தொடு நிற்றலில் தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் மகன் மற்றும் தந்தைக்கும் கூறும் முறைமையாகும். சான்றாக,

"அகவன் மகளே அகவன் மகளே" என்னும் குறுந்தொகையின் 23 ம் பாடல் அறத்தொடு நிற்றலைக் கூறுகின்றது. அறத்தொடு நிற்றல் குறித்து தொல்காப்பியர்,

"எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்

கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு

உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய

எழு வகைய என்மனார் புலவர்"

கூறுகின்றார் (Ilampuranar, 2019).

## மனைவியும் தெய்வமாதல்

சிறந்த கற்புடைய பெண்ணின் உள்ளத்திற்கு தெய்வம் அருள் செய்யும் என்னும் நம்பிக்கை சங்க காலத்தில் இருந்தது. கணவனை,

"குன்றுகெழு நாடன்

வருவதோர் காலை இன்முகம் திரியாது

கடவுட் கற்பின் அவன்எதிர் பேணி

மடவை நீ எனக் கடவுபு

துனியல் வாழி" (Somasundaranar, 2007)

தெய்வமாக கருதும் பெண்கள் தெய்வமாய் போற்றப்பட்டனர், என்பதன் வழி கணவன் மனைவிக்கான அறவாழ்வினை எடுத்துக்கூற தெய்வத்தின் வழி சான்றோர்களால் இல்லறம் கட்டமைக்கப்பட்டது. கற்புடைய மனைவியின் மாண்பினை வள்ளுவர்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்

பெய்எனப் பெய்யும் மழை"

இக்குறளில் கூறுகின்றார் (Devaneyap Pavanar, 2007).

## பண்டமாற்றும் முறை

வணிகக் கூறுகளில் முக்கியமானது பண்டமாற்றும் முறையாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் சார்ந்த மக்கள் தம் நிலத்தில் விளையும் பொருளினை, பிற நிலத்தின் மக்களிடத்து

கொடுத்தும் அவர் நிலத்துப் பொருளினை பெற்றுக்கொண்ட வணிக முறை குறுந்தொகைப் பாடல்களில் அறியப்படுகின்றது. உப்பு விளையும் களத்திற்கு, வெண்னெயுடன் செல்லும் பெண்ணின் நிலையினை,

“உப்பை மாறி வெண்ணெல் தரீஇய

உப்புவிளை கழனிச் சென்றனள்”

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது (Somasundaranar, 2007).

## கற்பு வாழ்வு

களவு வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனும், தலைவியும் இறுதியாக கற்பு நிலைக்கு மாற வேண்டும், அதுவே வாழ்வியல் ஒழுக்கமாகும். இவையே ஆண், பெண்ணுக்கான கற்பு நெறியாக சான்றோர்களால் கட்டமைக்கப்படுகிறது. இத்தகைய நிலையினை, தொல்காப்பியர்,

“பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப”

எனக் கூறுகின்றார் (Ilampuranar, 2019). தலைவன், தலைவியரின் காதல் குறித்து,

“யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி யறிதும்

செம்புலப் பெயனீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே” (Somasundaranar, 2007)

இப்பாடலில் அறியப்படுகின்றது. இத்தகைய காதலே பின்நாளில் கரணமாகின்றது.

## பொருட் பிரிவு

இல்லறம் மகிழ்ச்சியுற பொருள்வளம் தேவையானதாகும்.

“வினையே ஆடவர்க்கு உயிரே வாள் நுதல்

மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்” (Somasundaranar, 2007)

என்கிறார், குறுந்தொகையில் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர். பொருளினும் தலைவியின் உயிரே பெரிதென எண்ணி தலைவன் செலவழுங்குகிறான். சமூக மேம்பாட்டிற்கான பொருட் சிறப்பும், இல்லற மேம்பாட்டிற்கான தலைவனது வருகையும் கூறப்படுகின்றது. தலைவி தோழியிடத்து வினவுவதாக,

“அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து

பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்

உரவோர் உரவோர் ஆக

மடவம் ஆக மடந்தை நாமே” (Somasundaranar, 2007)

இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

## மழை

உயிரினங்கள் வாழ்வதற்க்கு முதன்மையானது, மழைநீராகும். கார் காலம் என்பது மழைக்கான காலமாகும். உணவின் உற்பத்திக்கு அடிப்படையானது மழையாகும். மழை என்ற சொல் குறுந்தொகையில்,

"கமஞ்சூல் மாமழை",

"கருவி மாமழை"

"பழமழை"

"தண்மழை" (Somasundaranar, 2007)

போன்ற அடைமொழிகளுடன் இடம்பெறுகின்றது. குறுந்தொகைப் பாடலில் கார்காலத்து மழை தலைவனின் வருகைக்கு முன்னும், பின்னும் இன்பத்தையும், துன்பத்தையும் தலைவிக்கு தருகின்றது. மழையின் சிறப்பினை வள்ளுவர்,

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்

வாரி வளங்குன்றிக் கால்" (Devaneyap Pavanar, G. 2007)

கூறுகின்றார். தலைவன் கார்காலத்தின் தொடக்கதில் திரும்பி விடுவேன் எனக் கூறிச் சென்று திரும்பவில்லை. அப்போது பெய்யும் மழையினை, "வம்ப மழை" எனக் கூறி வருந்தும் தலைவியிடத்து தோழி ஆற்றுவிக்கும் இக்காட்சியை,

"வம்புப் பெய்யுமால் மழையே; வம்புஅன்று,

கார்இது பருவம் ஆயின்,

வாரா ரோ, நம் காத லோரே?" (Somasundaranar, 2007)

குறுங்கீரனாரின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மழையானது உழவு என்னும் பொருளாதார சமூக மேம்பாட்டிற்கும், கார்காலச் சூழலில் தலைவியின் உள்ளத்தில் இன்ப, துன்பத்திற்கான காரணியாக திகழ்வதனை குறுந்தொகைப் பாடல்களில் அறியப்படுகின்றது.

## இறை வழிபாடு

சங்க கால மக்கள் இறை நம்பிக்கை உடையவராய் திகழ்ந்தனர். மலையின் ஒரு பகுதியில் அணங்கு போன்ற பெண் தெய்வமாக உள்ளது கொல்லிப்பாவையாகும். சேர மன்னனின் மலையின் மேற்குப் பகுதியில் கொல்லித் தெய்வம் உள்ளதனை,

"வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்

பாவையின்"

"பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்

கருங்கண் தெய்வம் குடவரை யெழுதிய

நல்லியற் பாவை" (Somasundaranar, 2007)

இவ்வரிகளுள் அறியப்படுகின்றது. குறுந்தொகையில் முருகன், கொல்லிப்பாவை, நடுகல் வழிபாடு போன்ற இறை சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. சங்க கால இறை வழிபாடு, அக்காலத்தினுடைய பண்பாட்டினை எடுத்துரைக்கின்றன.

## முடிவுரை

இவ்வாய்வில் சங்க கால மக்கள் செல்வ வளத்துடன் சிறப்புற்றிருந்தது அறியப்படுகின்றது. சங்க காலச் சூழலில் கல்வி வளம், தொழில் வளம், மழை வளம், ஈகை, இறை வழிபாடு முதலானவை சிறப்புற்றிருந்தது அறியப்படுகின்றது. தனி மனிதன், இல்லறம், சமூகம் முதலான கட்டமைப்புகளில் அற வாழ்வியல் சிந்தனைகள் அறியப்படுகின்றது. சங்க காலச் சமூகத்தின் சமூக மேலாண்மை பற்றிய கருத்தாக்கங்கள் குறுந்தொகைப் பாடல்களின் வழி ஆராயப்பட்டுள்ளது. சங்க கால வாழ்வியல்

விழுமியங்கள் ஆராயப்பட்டுள்ளது. சங்ககால மக்களின் மனித நேயம் ஆராயப்பட்டுள்ளது. சங்ககால மக்களின் வணிகம் அறியப்படுகின்றது. சங்ககால மக்களின் அக உணர்வுகள் அறியப்படுகின்றது.

## References


Devaneyap Pavanar, G. (2007) Thirukural Tamil Maraburai, Sri Hindhu Publications, Chennai, India

Duraiswamipillai, S. (2017) Purananuru Moolamum Uraiyum, aiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Ilampuranar, (2019) Tholkappiyam Porulathikaram, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Somasundaranar, P.V. (2007) Kurunthogai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License